அனுப்புநர்

விடுநர்

திரு.பெ.குமாரவேல்பாண்டியன், இ.ஆ.ப.,
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியர்,
வேலூர் 632 002.

பெறுநர்

1. முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

2. மாவட்ட கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

ந.க.எச்2/5506/2022, நாள்: 26.10.2022

அய்யா,

பொருள்: தேர்தல் - வேலூர் மாவட்டம் - தேர்தல் எழுத்தறிவு (ELC) - பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு பாட்டு (singing) போட்டிகள் நடத்துதல் - தொடர்பாக.

பார்வை: சென்னை, தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் முதம்மை செயலர் அவர்களின் கடிதம் எண்.4807/தேர்தல்-7/2022-12, நாள்:20.10.2022.

*****

பார்வையில் காணும் கடிதத்தினை காண கேட்டுக் கொள்கிறேன்.

பார்வையில் காணும் சென்னை தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர் அவர்களின் கடிதத்தில் பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு பாட்டு (singing) போட்டிகள் நடத்தப்பட வேண்டும் எனவும், இப்போட்டியில் 18 வயதிற்குட்பட்ட 9, 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது. மேலும்,

<u>மேற்படி போட்டிகள் நடத்துதல் தொடர்பான விளக்கங்கள்:</u>

1. ஒவ்வொரு பள்ளிகளிலும் ஏற்கனவே தேர்தல் எழுத்தறிவு (Electoral Literacy Clubs) தொடர்பாக ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அவர்களின் தலைமையில் பள்ளிகளில் இப்போட்டி நடத்தப்பட வேண்டும்.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோர் வேலூர் மாவட்டத்தில் 90 பள்ளிகளை தேர்வு செய்து பாட்டு போட்டிகளை நடத்த வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தபட்சம் 40 மாணவர்கள் போட்டியில் கலந்துக் கொள்ள வேண்டும்.
3. பாட்டு போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்கள் மேற்படி தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்டுள்ள பாட்டு வரிகளை பின்னனி இசையுடன் பாடவைத்து அவற்றினை தெளிவாக படம் பிடித்து வீடியோ வடிவ கோப்பாக அனுப்பப்பட வேண்டும். மேற்படி போட்டியாளர்கள் பாடுவதற்கு தேவையான வசதிகளை பள்ளி நிர்வாகத்தினால் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
4. இப்போட்டியினை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள் 16.11.2022 ஆம் தேதிக்குள்ளாக நடத்தி முடிக்கப்பட வேண்டும்.
5. மேற்படி போட்டிகளில் முதல் ஐந்து இடங்களை 17.11.2022 ற்குள் பள்ளி நிர்வாகமே தேர்வு செய்து பரிசு பொருட்களை வழங்கலாம்.

6. மேலும் மேற்படி பள்ளிகளில் நடைபெறும் போட்டிகள் அனைத்தையும் பதிவு செய்த வீடியோவை, முதல் ஐந்து இடங்களை பெற்ற மாணவ மாணவியர்களின் பதிவை ஒரு DVD யிலும் மற்ற மாணவ மாணவியர்களின் பதிவுகளை மற்றொரு DVD யிலும் தனித்தனியாக பதிவு செய்து இரண்டு DVD க்களையும் 18.11.2022-க்குள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக தேர்தல் பிரிவிற்கு அனுப்ப வேண்டும்.

மேலும் இணைப்பு-II ல் தேர்தல் ஆணையத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பாடல் வரிகள் விவரம், இணைப்பு-III ல் முதல் ஐந்து இடங்களைப் பெறும் நபர்களின் விவரம் அனுப்ப வேண்டிய பட்டியல் மற்றும் இணைப்பு-IV ல் போட்டிகள் நடத்தப்படும் உத்தேச பள்ளிகளின் விவரங்கள் தெரிவிக்க வேண்டிய பட்டியல் ஆகியன இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேலும் பார்வையில் காணும் கடிதத்துடன் வரப்பெற்ற இணைப்பு-I ல் தெரிவித்துள்ளபடி அறிவுரைகளை பின்பற்றி மேற்குறிப்பிட்ட தேதியில் இப்போட்டிகளை நடத்தி முழுமையாக அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மேலும் இணைப்பு-IV ல் குறிப்பிட்டுள்ளவாறு போட்டிகள் நடத்தப்படும் உத்தேச பள்ளிகளின் (90 பள்ளிகள்) விவரங்களை 04.11.2022 ற்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.**

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு: மேற்கண்டவாறு.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியருக்காக,
வேலூர் மாவட்டம்.

நகல்: வாக்காளர் பதிவு அலுவலர்/ஆணையாளர், வேலூர் மாநகராட்சி
நகல்: வாக்காளர் பதிவு அலுவலர்/ வருவாய் கோட்ட அலுவலர், வேலூர்/குடியாத்தம்.
நகல்: அனைத்து உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள்,
வேலூர் மாவட்டம் .

இணைப்பு - I

**ANNEXURE-I**

**SVEEP Song Competition for Students at School and College level.**

As part of the ELC Competitions-2022 which is being conducted across the State, it is decided to conduct Song Contest among the students during the month of November, 2022 and the details are as follows:-

i. Song Competition for the Government and Private School Students below 18 years belonging to standard IX, X, XI and XII in an institution.

ii. Song Competition for Students in the age group of 18-21 years, belonging to Higher Level Educational Institutions.

2. The modalities for the above said two categories of competitions are as follows:

A. Each District is to identify both Government and private schools (School students of the standard IX, X, XI and XII) and Higher Level Educational Institutions (in the age group of 18-21) in their District.

B. The rules of this Program are as follows:

a. The head of the Institution will select a Convener of the Electoral Literacy Club (ELC), who will coordinate with the office of District Election officer for further participation in other competitions and programs.

b. Ten students should be selected by the Convener, as members of the Electoral Literacy Club for smooth handling of the above matters. One among these students may be designated as the Campus Ambassador for reporting to the Convener of ELC.

c. The participants should be students of the concerned institution.

d. A minimum of 40 students should participate in the competition.

e. The Head of the Institution is requested to hold this competition at a specified time and place in the Institution on or before 20.11.2022. No impersonation shall be permitted.

f. The song to be used for the Competition, Lyrics of the Song, Music Track of the song for the students will be sent to all District Election Officers for forwarding the same to the concerned institutions for competitions. The students have to sing the song along with the back ground music track enclosed. The Institution may also choose to provide the facilities for song competition to its students if it can afford to it.

(P.T.O)

g. All the original entries will be saved on Audio Video format (AV format). Soft copies of best five entries, will be handed over by the Institution to the designated staff of the District Election Officer.

h. The first five prizes will be decided by a three-member committee to be formed to evaluate the entries, by the Head of the Institution on or before 20.11.2022. The Head of the Institution in the presence of such other dignitaries as Electoral Registration Officer/ Assistant Electoral Registration Officer/Booth Level Officer Supervisor/ Booth Level Officer will hand over the Cash awards which will be each Rs.100/- for first five students on or before 25.11.2022.

i. All such entries received in Audio Video format from these Institutions in a District will be collected at the District Level and the best among them, as decided by a three-member Committee designated by the District Election Officer will be awarded as: First Prize Rs.2000/-, Second Prize Rs.1000/- and Third Prize Rs.500/- by the District Election Officer on the National Voters' Day 2023, to be held on 25th January 2023.

j. Best 3 entries of Song Competition from each Districts will be collected at the State level and the best among them will be awarded as: First Prize Rs.10000/-, Second Prize Rs.5000/- and Third Prize Rs.3000/- by the Chief Electoral Officer on the National Voters' Day 2023 to be held on 25th January, 2023.

k. Certificates of Appreciation has already designed and issued from the office of the Chief Electoral Officer.

l. Maximum number of participation of Institutions:

Schools – Maximum 80-90 schools per district

Colleges - Maximum 50 colleges per district

//TRUE COPY//

SECTION OFFICER

இணைப்பு – II

SONG : ஒருவிரல்உயர்த்துவோம்

ஒஹோஒஓஓஓஓ

ஒஹோஒஓஓஓஓ

ஒஹோஒஓஓஓஓ

ஒஹோஒஓஓஓஓ

ஒரு விரல் உயர்த்துவோம்

அதன் பெருமையை உணர்த்துவோம்

ஒரு விரல் உயர்த்துவோம்

அதன் பெருமையை உணர்த்துவோம்

தேசத்தின் கருவறை வாக்குச்சாவடி போற்றுவோம்

தேசத்தின் கருவறை வாக்குச்சாவடி போற்றுவோம்

18 வயதினிலே

வாக்காளராய் ஆகிறோம்

18 வயதினிலே

வாக்காளராய் ஆகிறோம்

தேசத்தின் வளர்ச்சிக்கு

அவதாரமும் எடுக்கிறோம்

அலட்சியம் வேண்டாம் நண்பா

வாக்கின் அருமை புரிந்திடு நண்பா

18 வயது நிறைந்தால்

உன் வாக்குரிமை பதிந்திடு நண்பா

நம் நாடு தந்த பெருமை

நமக்கு வாக்களிக்கும் உரிமை

NVSP இணைய தளம்

வாக்காளர் பற்றிய தகவல் தரும்

1950 வாக்காளர்களின் தகவல் மையம்

1950 வாக்காளர்களின் தகவல் மையம்

ஒவ்வொரு வாக்கும் தேசப்பற்று

வாக்களித்து நீ கடமை ஆற்று

ஒவ்வொரு வாக்கும் தேசப்பற்று

வாக்களித்து நீ கடமை ஆற்று

அலட்சியம் வேண்டாம் நண்பா

வாக்கின் அருமை புரிந்திடு நண்பா

18 வயது நிறைந்தால்

உன் வாக்குரிமை பதிந்திடு நண்பா

அலட்சியம் வேண்டாம் நண்பா

வாக்கின் அருமை புரிந்திடு நண்பா

18 வயது நிறைந்தால்

உன் வாக்குரிமை பதிந்திடு நண்பா

பிரிவு - III.

Winners List

(in English Font)

Name of the School and School Address

| Sl.No. | Places | Name of the Student | Std |
|---|---|---|---|
| 1 | 1st | | |
| 2 | 2nd | | |
| 3 | 3rd | | |
| 4 | 4th | | |
| 5 | 5th | | |

இணைப்பு IV.

Name of the Schools
(in English Font)

| Sl.No. | Name of the School and School Address |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |